சூழ்நிலைதான் இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு என்று தனியாக வேறு குழுக்களை அமைத்தால், நலமாக இருக்கும். அதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாசுக் கட்டுப்பாடு வாரியம் இயங்குவதே தெரியவில்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர், அது இயங்குவது எப்படித் தெரிய வேண்டும் என்று எங்களுக்குத் தெரிவிக்கிறார்கள் என்று தெரியவில்லை. இந்த வாரியம் 1982-லேதான் உருவாக்கப்பட்டது. அதிலேயிருந்து மிகச் சிறப்பாக இயங்கிக் கொண்டு இருக்கிறது. ஆனால், இந்தத் தொழிற்சாலைகள் எல்லாம் அதற்கு முன்னாலேயிருந்து இயங்கிக் கொண்டு இருக்கிற தொழிற்சாலைகள். எனவே, தொழிலாளர்களைப் பற்றி கேள்வி வருகிறபோது, மாசுக் கட்டுப்பாடு வாரியம் அதைத் தடுத்து நிறுத்திவிட்ட காரணத்தால், ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்று நீங்களே கூட கேட்கிறீர்கள். எனவேதான் அந்த வாரியம் இந்தக் காரியங்களைச் செய்கிறபோது, நிதானமாகவும், அதே நேரத்திலே இந்த மாசுகளை எல்லாம் தடுக்கின்ற வகையிலே, நடவடிக்கையைத் தொடர்ந்து எடுத்துக் கொண்டிருக்கிறது. எனவே, எந்தத் தொழிற்சாலையும் பாதிக்கப்படாமல், அங்கே இருக்கிற தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கின்ற வகையிலேயும். பொதுமக்களுக்கும் இடையூறு இல்லாமல். இந்த மாசுக் கட்டுப்பாடு வாரியம் நிச்சயமாக நல்ல காரியத்தைச் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 501, திரு. சி. இராமசுவாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

501—

மலைவாழ் மக்கள் அனுபவிக்கும் நிலங்களை அவர்களுக்கே மீண்டும் அளித்தல்.

*4028—திரு. சி. இராமசுவாமி :

மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கல்வராயன் மலைப் பகுதியில் வாழும் மலைவாழ் மக்கள் மீது வனத்துறையினர் வழக்குகள் போட்டு அவர்கள் அனுபவிக்கும் நிலங்களில் இருந்து அவர்களை வெளியேற்றும் முயற்சிகள் நடைப்பட்டதை அரசு அறியுமா?

1992 ஏப்ரல் 10]

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு மீண்டும் அந்த இடங்களை அளிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) நிலமற்ற மலைவாழ் மக்களுக்கு, ஒரு குடும்பத்திற்கு இரண்டு ஹெக்டேர்கள் வீதம் 10,000 ஹெக்டேர் நிலத்தை நில ஒப்படை செய்து தர, அரசு கொள்கை அளவில் ஒப்புக் கொண்டுள்ளது. இதற்குத் தகுதியான மலைவாழ் மக்கள் குடும்ப விவரங்கள், மற்றும் ஒப்படை செய்யப்பட தகுதியான நிலங்களைத் தேர்வு செய்யுமாறு தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவரை அரசு கேட்டுக் கொண்டுள்ளது. இது தொடர்பாக மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை மேற் கொண்டுள்ளார்.

முற்பகல் 9–55

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கல்வராயன் மலையில் வாழும் மலைவாழ் மக்கள் மீது வனத்துறையினர் பொய் வழக்குகள் போட்டு, அவர்கள் அனுபவித்து வரும் நிலங்களிலிருந்து அவர்களை அப்புறப்படுத்தி மரக் கன்றுகளை நட்டுள்ளார்கள். அந்த மரக் கன்றுகளை நட்டுள்ள நிலத்தை அரசு அவர்களிடமிருந்து கைப்பற்றி மீண்டும் மலை வாழ் மக்களிடத்திலே ஒப்படைக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டிய வயிறும், குழிவிழுந்த கண்களோடும் உழைக்கின்ற ஏழை எளிய மலைவாழ் மக்களுக்காக 10,000 எக்டேர் பரப்பிலே இருக்கின்ற நிலங்களை அவர்களுக்குக் கொடுப்பதற்காக நம்முடைய தமிழகத்தின் ஒப்பற்ற தலைவியாக இருக்கின்ற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் தலா இரண்டு எக்டேர் வீதமாக அவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறார்கள்.

திரு. சி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வராயன் மலையிலுள்ள கீராப்பள்ளி, தேக்கம் பட்டு, சேராப்பட்டு, புரசம்பட்டு, ஆவலாறு, ஆத்துக்குழி போன்ற ஊர்களில் வனத்துறையினர் அவர்களுடைய நிலங்களைக் கைப்பற்றி மரக் கன்றுகளை நட்டுள்ளார்கள்.

வனத்துறையினர்மீது கள்ளக்குறிச்சி நீதிமன்றத்தில் நானே பல வழக்குகளை மலைவாழ் மக்களுக்காக தொடுத்துள்ளேன், எனவே அரசு அந்த நிலங்களைக் கைப்பற்றி. மீண்டும் அந்த பாதிக்கப்பட்ட மக்களுக்குக் கொடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புனல்காடு என்பது மலைவாழ் மக்கள் இரண்டு ஆண்டு காலத்திற்கு ஒரு முறை பயிர் செய்துவிட்டு, வேறு இடத்திற்கு மாறி விடுகிறார்கள், அது வனத்துறைக்குச் சொந்த இடமாக இருக்கின்ற காரணத்தாலும், வனத்துறை அதிலே பல்வேறு பழத் தோட்டங்களை வளர்ப்பதற்கு வாய்ப்பு இருக்கின்ற காரணத்தாலும். குறிப்பிட்ட இடங்களிலே மலைவாழ் மக்களை அனுமதிக்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது, அதைத்தான் கருத்திலே கொண்டு, அந்த மலைவாழ் மக்களுடைய கண்ணீரைத் துடைக்கின்ற வகையிலே தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நம்முடைய தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். 10,000 எக்டேர் நிலப் பரப்பிலே அந்த நிலங்களைத் தேர்வு செய்து, ஒரு குடும்பத்திலே இருக்கின்ற அதாவது இரண்டு பேர், அல்லது மூன்று பேர் இருந்தாலும், அது குடும்பம் என்ற முறையில் இரண்டு எக்டேர் நிலங்களை அவர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 502. திரு. கே. கந்தசாமி. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

502—

தம்மம்பட்டியில் அண்ணா போக்குவரத்துக் கழகப் பணிமனை.

*8090—திரு. கே. கந்தசாமி :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தம்மம்பட்டியில் அண்ணா போக்குவரத்துக் கழகப் பணிமனை (Depot) தொடங்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?